©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 6.40 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 15]

சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 22, 2009
சித்திரை 9, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

*[அரசாணை (நிலை) எண் 122, சுற்றுச்சூழல் மற்றும் வன(வ.5)த் துறை,, நாள்: 03 நவம்பர் 2008.]*

1972ஆம் ஆண்டு வன விலங்குகள் (பாதுகாப்பு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 53/1972) 26–A பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையில் நாற்புற எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி, வனவிலங்குகளையும் அவற்றின் சுற்றுச்சூழலையும் பாதுகாத்து, இனப்பெருக்கம் செய்து, மேம்படுத்தும் நோக்கத்திற்காக, போதிய அளவில் உயிரின வாழ்க்கைச்சூழல், தாவரங்கள், விலங்குகள், நில இயல்தன்மை, இயற்கைச்சூழல் மற்றும் விலங்கியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதைக் கருதிப்பார்த்து, மேற்சொன்ன பகுதி, 3 நவம்பர் 2008ஆம் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும், வனவிலங்கு உய்விடமாக இருக்குமென்று இதனால் அறிவிக்கிறார்.

**விவர அட்டவணை**

| | |
|---|---|
| (1) மாவட்டத்தின் பெயர்: | ஈரோடு |
| (2) வனக்கோட்டத்தின் பெயர்: | சத்தியமங்கலம் வனக் கோட்டம் |
| (3) வட்டத்தின் பெயர்: | சத்தியமங்கலம் மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் |
| (4) வனவிலங்கு உய்விடத்தின் பரப்பு: | |

| *காப்புவனத்தின் பெயர்* *(1)* | *பரப்பு எக்டேரில்* *(2)* |
|---|---|
| (i) குதியாலத்தூர் காப்புவனம் (ஒரு பகுதி) | 29947.00 |
| (ii) குதியாலத்தூர் காப்பு வன விரிவாக்கம் | 162.31 |
| (iii) தாளமலை காப்புவனம் (ஒரு பகுதி) | 21085.00 |
| (iv) தாளமலை காப்புவன விரிவாக்கம் | 1240.63 |
| மொத்தப் பரப்பளவு | 52434.94 |

| | |
|---|---|
| (5) வனவிலங்கு உய்விடத்தின் பெயர்: | சத்தியமங்கலம் வனவிலங்கு உய்விடம் |

*நாற்புற எல்லைகள் பற்றிய விவரம்*

*வடக்கு:* தாளமலை காப்பு வனத்தின் தாளவாடி சரகம் மற்றும் குதியாலத்தூர் காப்பு வனத்தின் ஹாசனூர் தூக்க நாயக்கன் பாளையம் சரகம்

*கிழக்கு:* ஈரோடு வனக் கோட்டத்தின் பவானி வட்டம் (பர்கூர் காப்பு வனத்தின் நான்காம் எல்லை)

*தெற்கு:* மோயார் ஆறு மற்றும் பவானி ஆறு

*மேற்கு:* கருநாடக மாநில எல்லை

**என். சுந்தரதேவன்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்*
*மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை,*

## தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை

### அறிவிக்கை

*[அரசாணை (2டி) எண் 38, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 16 ஜூலை 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசுச் செயலாளர், தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

### வரைவு அறிவிக்கை

1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பிரிவிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் உருவாகி, 15 செப்டம்பர் 2004ஆம் நாளிடட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்—II, பிரிவு—2இல், 453 மற்றும் 454ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.வே.வா./824/2004ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழ்க்காணும் I மற்றும் II விவர அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில், தங்கம் மற்றும் வெள்ளியிலான பொருள்களின் தயாரிப்புத் தொழிலில் பணியில் அமர்த்தப்பட்டுள்ள வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, இதனால் திருத்தியமைக்கிறார்.

### விவர அட்டவணை-I

### *தங்கத்திலான பொருள்களைத் தயாரித்தல்*

| *தொடர் எண்* | *பொருள்களைத் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தங்கத்தின் எடை.* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (கிராம் ஒன்றுக்கு)* | |
|---|---|---|---|
| | | *கற்களுடன் கூடிய பொருள்களுக்கு* | *கற்கள் இல்லாமல் செய்யும் பொருள்களுக்கு* |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| | | ரூபாய். காசு | ரூபாய். காசு |
| **அ.** | **செய்யும் வேலைக்கேற்ற ஊதிய வீதங்கள்:** | | |
| 1. | 1 கிராம் முதல் 5 கிராம் வரையில் | 41.51 | 103.77 |
| 2. | 5 கிராமிற்கு மேல் 10 கிராம் வரையில் | 29.07 | 83.03 |

| தொடர் எண். | பொருள்களைத் தயாரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தங்கத்தின் எடை. | குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (கிராம் ஒன்றுக்கு) | |
|---|---|---|---|
| | | கற்களுடன் கூடிய பொருள்களுக்கு . | கற்கள் இல்லாமல் செய்யும் பொருள்களுக்கு. |
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூபாய். காசு | ரூபாய். காசு |
| **அ. செய்யும் வேலைக்கேற்ற ஊதிய வீதங்கள்**—*தொடர்ச்சி* | | | |
| 3. | 10 கிராமிற்கு மேல் 20 கிராம் வரையில் | 20.07 | 62.26 |
| 4. | 20 கிராமிற்கு மேல் 30 கிராம் வரையில் | 18.68 | 41.51 |
| 5. | 30 கிராமிற்கு மேல் 40 கிராம் வரையில் | 16.61 | 33.21 |
| 6. | 40 கிராமிற்கு மேல் 50 கிராம் வரையில் | 14.54 | 29.07 |
| 7. | 50 கிராமிற்கு மேல் 75 கிராம் வரையில் | 12.46 | 24.91 |
| 8. | 75 கிராமிற்கு மேற்பட்டு | 10.37 | 20.75 |

**ஆ. நாள் அடிப்படையிலான குறைந்த அளவு ஊதிய வீதம் நாளொன்றுக்கு ரூபாய் 139.00**

## விவர அட்டவணை-II

### *வெள்ளியிலான பொருள்கள் தயாரிப்பு*

**அ. கொலுசு தயாரித்தல்:**

| தொடர் எண் | பணியின் வகை | குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (கிலோ ஒன்றுக்கு). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூபாய். காசு |
| 1. | ஒரு கம்பி இழுத்தல் | 16.61 |
| 2. | ஜதை வளைத்தல் | 207.56 |
| 3. | **பூக்கள் தயாரிப்பு:** | |
| | (அ) கெட்டி | 124.54 |
| | (ஆ) மெல்லியது | 103.77 |
| 4. | அரும்பு | 24.91 |
| 5. | சங்கிலி | 41.51 |
| 6. | சலங்கை | 103.77 |
| 7. | முகப்பு | 166.05 |
| 8. | திருகாணி | 145.28 |
| 9. | இணைத்தல் (முழு வடிவில்) | 186.80 |

**ஆ. ஏனைய வெள்ளிப் பொருட்கள்:**

| தொடர் எண் | பொருள்கள் தயாரிக்கத் தேவையான வெள்ளியின் எடை. | ஒவ்வொரு 10 கிலோ கிராமிற்கும் அதன் பகுதிக்குமான குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள். | |
|---|---|---|---|
| | | வேலைப்பாடற்ற பொருள்களுக்கு | வேலைப்பாடுள்ள பொருள்களுக்கு. |
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூபாய். காசு | ரூபாய். காசு |
| 1. | 1 கிராம் முதல் 10 கிராம் வரையில் | 24.91 | 33.21 |
| 2. | 10 கிராமிற்கு மேல் 20 கிராம் வரையில் | 24.21 | 31.14 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3. | 20 கிராமிற்கு மேல் 30 கிராம் வரையில் | 22.84 | 29.07 |
| 4. | 30 கிராமிற்கு மேல் 40 கிராம் வரையில் | 21.44 | 26.98 |
| 5. | 40 கிராமிற்கு மேல் 50 கிராம் வரையில் | 20.75 | 25.61 |
| 6. | 50 கிராமிற்கு மேல் 100 கிராம் வரையில் | 20.07 | 24.91 |
| 7. | 100 கிராமிற்கு மேல் 200 கிராம் வரையில் | 18.68 | 24.91 |
| 8. | 200 கிராமிற்கு மேல் 500 கிராம் வரையில் | 16.61 | 21.44 |
| 9. | 500 கிராமிற்கு மேல் 1000 கிராம் வரையில் | 12.46 | 16.61 |
| 10. | 1 கிலோ கிராமிற்கு மேல் | 10.37 | 13.14 |

**இ. நாள் அடிப்படையிலான குறைந்த அளவு ஊதிய வீதம் நாளொன்றுக்கு ரூபாய் 131.00**

***விளக்கங்கள் :***

(1) அகவிலைப்படி:—தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை ஊதியங்களுடன், கீழே விவரித்துள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண். 475 புள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது, 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு கூடுதலாக 27 காசுகள் (இருபத்தேழு காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த திருத்தம், முந்தைய 12 மாதங்களின் அதாவது, ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை, நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து செயலுக்கு வரும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

2. மாத ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

3. பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

4. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 96, தொழிலாளர் வேலைவாய்ப்பு (J2)த் துறை, நாள்: 8 ஆகஸ்டு 2008.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும், 9ஆம் பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ‘டைமெக்ஸன்’ தொழிலில் பணியமர்த்துவதற்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிப்பதைப் பொறுத்த வரையில், விசாரணைகளை நடத்துவதற்கும், அரசுக்கு ஆலோசனை நல்குவதற்கும், பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை இதனால் நியமிக்கிறார்.

**தனி நபர்கள்:**

| | | |
|---|---|---|
| (1) | தொழிலாளர் நலத் துறை,<br>துணை ஆணையாளர், கோயம்புத்தூர். | : **தலைவர்** |
| (2) | தொழிலாளர் துறை ஆய்வாளர்,<br>கோயம்புத்தூர். | : **செயலாளர்** |
| (3) | உதவி இயக்குநர்,<br>பொருளாதாரம் மற்றும் புள்ளியியல்<br>இயக்ககம், சென்னை—600 006. | : **உறுப்பினர்** |

**வேலை அளிப்பவரின் பிரதிநிதிகள் :**

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு. என். பாஸ்கரன்,<br>த/பெ. திரு. நடராஜன்,<br>டைமெக்ஸன் டயமண்ட்ஸ் லிமிடெட்,<br>313/4, மேட்டுப்பாளையம் சாலை,<br>என்.எஸ்.என். பாளையம், கோயம்புத்தூர். | : | உறுப்பினர் |
| (2) | திரு. ஜே. யேசுமார்க்,<br>த/பெ. திரு. எஸ். ஜோசப் (இறந்துவிட்டார்)<br>39, செல்லாண்டி அம்மன் நகர்,<br>உப்பிலிபாளையம்,<br>சிங்காநல்லூர் (அஞ்சல்),<br>கோயம்புத்தூர்—641 005. | : | உறுப்பினர் |
| (3) | திரு. எம். வெங்கடாசலமூர்த்தி,<br>த/பெ. வி. முருகேசன்,<br>மனை எண் 3, பாலாஜி பவனம்,<br>பாரதி பூங்கா, பழனி,<br>கவுண்டர்புதூர்,<br>கே. வடமதுரை (அஞ்சல்),<br>கோயம்புத்தூர்—641 017. | : | உறுப்பினர் |

**தொழிலாளர்களின் பிரதிநிதிகள் :**

| | | | |
|---|---|---|---|
| (1) | திரு. ப்பி. சுப்ரமணியன்(எச்.எம்.எஸ்.),<br>த/பெ. பரமசிவம்,<br>2212, திருச்சி சாலை,<br>சிங்காநல்லூர்,<br>கோயம்புத்தூர்—641 005. | : | உறுப்பினர் |
| (2) | திரு. ப்பி. துரைசாமி (ஐஎன்டியூசி),<br>த/பெ. பொன்னுசாமி,<br>பழைய எண் 5, 6, புதிய எண் 3, 4,<br>3, தனலட்சுமி நகர்,<br>சித்த புதூர்,<br>கோயம்புத்தூர்—641 044 | : | உறுப்பினர் |
| (3) | திரு. ப்பி.டி.சி. பாலு (எல்.ப்பி.எப்)<br>த/பெ. வி. வெள்ளிக்கண்ணு,<br>ஏ.எச். 62, 5—வது தெரு,<br>சாந்தி காலனி, அண்ணா நகர்,<br>சென்னை—600 040 | : | உறுப்பினர் |

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (2டி) எண் 40, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 12 ஆகஸ்ட் 2008.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதப்பட்டுள்ள பின்வரும் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அந்நாளுக்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் மேற்சொன்ன கால அளவிற்குள் எவரிடமிருந்தேனும் இது குறித்த மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெற்றால், அவற்றை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை, சென்னை—6இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர்மூலமாக அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—9 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த(1) உட்பிரிவில் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 15 செப்டம்பர் 2004ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழில்*** பாகம்—II, பிரிவு—2, 458 மற்றும் 459ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.ந.வே.வா/828/2004ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாட்டில் அச்சகங்கள் தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைப்பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அதே அட்டவணையின் (2) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:—

**விவர அட்டவணை**

***அச்சகங்களில் வேலைவாய்ப்பு***

| *பணி/பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* | | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | | |
| | *மண்டலம் அ* | *மண்டலம் ஆ* | *மண்டலம் இ* |
| | *ரூ. காசு.* | *ரூ. காசு.* | *ரூ. காசு.* |
| | *(i)* | *(ii)* | *(iii)* |
| ***தொகுதி-I*** | | | |
| கணக்காளர், முதலாள் மற்றும் மேற்பார்வையாளர் | 2777.00 | 2579.00 | 2497.00 |
| ***தொகுதி-II*** | | | |
| எழுத்தர், காசாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து—தட்டச்சர், நேரம் குறிப்பவர், தனி அச்சு இயக்குபவர், தனி அச்சு வார்ப்புப் பொறி இயக்குபவர், வரி—இயக்குபவர், எதிரீட்டு அச்சிடுபவர், ஒளிப்பதிவாளர், பக்க ஒழுங்கமைப்பாளர், மற்றும் தானியங்கி இயந்திரம் இயக்குபவர். | 2663.00 | 2473.00 | 2375.00 |
| ***தொகுதி-III*** | | | |
| பார்வைப்படி திருத்துபவர், உருளை மிதி அச்சுப்பொறி இயக்குபவர், சமதளப்படிமத் தட்டுத் தயாரிப்பவர், மின் கம்மியர், அச்சுக் கோப்பவர், புத்தகம் கட்டுபவர், கோடு போடுபவர், அரைப்பவர் மற்றும் தாள் அணைப்பவர். | 2550.00 | 2359.00 | 2268.00 |
| ***தொகுதி-IV*** | | | |
| சுழற்றுபவர், உதவியாளர், அலுவலக உதவியாள், ஏவலாள், காவலாள் மற்றும் சிப்பம் கட்டுபவர். | 2398.00 | 2199.00 | 2177.00 |

***விளக்கங்கள்:—***

(1) **மண்டலங்களின் வகைப்பாடு:**—அ, ஆ மற்றும் இ மண்டலங்களில் பின்வரும் பகுதிகள் அடங்கும்:—

*மண்டலம் அ :* அனைத்து மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள்

*மண்டலம் ஆ :* சிறப்பு நிலை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகள்

*மண்டலம் இ :* மண்டலம் அ மற்றும் மண்டலம் ஆ—இல் குறிப்பிடப்பட்டவை நீங்கலான ஏனைய அனைத்துப் பகுதிகள்.

(2) ***அகவிலைப்படி:*** பணியாளர்களுக்கு மேற்சொன்ன குறைந்தளவு ஊதிய வீதங்களுடன் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்க வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது 2000ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது திங்களொன்றுக்கு ரூ. 4.55 (நான்கு ரூபாய் ஐம்பத்தைந்து காசுகள் மட்டும்) என்ற வீதத்தில் வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) இவ்வாறாக முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

(4) ஒரு நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

(6) அச்சகங்களில் பணியமர்த்தப்படும் தொழில் பழகுநர்களுக்கு 1961ஆம் ஆண்டு தொழில் பழகுநர் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 52/1961) குறிப்பிடப்பட்டுள்ளவாறு பயிற்சிகால உதவித் தொகை வழங்கப்படும்.

(7) தொழில் பழகுநர்கள் பணியமர்த்தப்படும்போது, அவர்கள் எந்த பதவித்தரத்திற்காக, பணியமர்த்தப்படுகிறார்களோ, அந்த பதவித் தரத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த அளவு ஊதிய வீதங்களில், 50 சதவீத ஊதியம் வழங்கப்படும்.

**ரமேஷ்குமார் கன்னா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

**அறிவிக்கை**

*[அரசாணை (2ப) எண் 51, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 16 அக்டோபர் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவை சேர்ந்த (1) உட்பிரிவின் *(b)* பகுதி 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 24–9–2003ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்—II, பிரிவு 2இல் 355–356ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/599/2003ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவிடம் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில், சோப்பு தயாரிப்புத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும் பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்படி சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

## விவர அட்டவணை

### *சோப்பு தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு*

| *தொடர் எண்.* | *பணியாளர்களின் வகைகள்.* | *குறைந்த அளவு அடிப்படை ஊதிய வீதங்கள்.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | ரூபாய். காசு |
| 1. | முதலாள்/மேற்பார்வையாளர்/ வேதியியல் வல்லுநர் | நாளொன்றுக்கு 135.00 |
| 2. | கொதிகலன் பணியாளர்/கலப்பவர்/ வேதியியல் வல்லுநர் | நாளொன்றுக்கு 130.00 |
| 3. | வெட்டுபவர் | நாளொன்றுக்கு 125.00 |
| 4. | முத்திரையிடுதல் | நாளொன்றுக்கு 123.00 |
| 5. | சிப்பம் செய்தல்: | |
| | (அ) பெட்டி | நாளொன்றுக்கு 122.00 |
| | (ஆ) பெயர்ச்சீட்டு | நாளொன்றுக்கு 122.50 என்ற உத்தரவாதமளிக்கப்பட்ட காலமுறை வீதத்திற்குட்பட்டு குரோஸ் ஒன்றுக்கு 4.44 |
| 6. | பல்வகைத் தொழிலாளர்கள்: | |
| | (அ) தொழிற்சாலைக்கு உள்ளே<br>(ஆ) தொழிற்சாலைக்கு வெளியே | நாளொன்றுக்கு 122.00 |
| 7. | அலுவலகப் பையன் | நாளொன்றுக்கு 122.00 |
| 8. | வேன் ஓட்டுநர்கள் | மாதமொன்றுக்கு 3483.00 |
| 9. | எழுத்தர் | மாதமொன்றுக்கு 3347.00 |
| 10.<br>11. | கணக்காளர்<br>தட்டச்சர் | மாதமொன்றுக்கு 3483.00 |
| 12.<br>13. | காசாளர்<br>விற்பனையாள் | மாதமொன்றுக்கு 3347.00 |

**விளக்கங்கள்:–** (1) தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு, அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(*i*) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் மாதமொன்றுக்கு கூடுதலாக 7 ரூபாய் (ரூபாய் ஏழு மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(*ii*) இந்த அகவிலைப்படி திருத்தம், முந்தைய பன்னிரெண்டு மாதங்களுக்கான அதாவது, ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை, நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

*(iii)* முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

3. (*i*) நாள் ஊதியத்தைக் கணக்கிட, மாத ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(*ii*) மாத ஊதியத்தைக் கணக்கிட நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

4. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (2டி) எண் 54, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 16 அக்டோபர் 2008.]*

தமிழ்நாடு 1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 2–7–2003 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்–II, பிரிவு—2, 271 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.வே.வா/476/2003ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை இரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், பின்வரும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டவாறு தமிழ்நாட்டில், ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகை சீருந்துகளில் பணிபுரிகின்ற வகை பணியாளர்களுக்கு, வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

### விவர அட்டவணை

***ஆட்டோரிக்ஷா மற்றும் வாடகைச் சீருந்துத் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள்***

| *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* |
|---|---|
| *(1)* | *(2)* |
| ஆட்டோரிக்ஷா ஓட்டுநர்கள் (மீட்டர்கள் பொருத்தப்பட்டது) | நாளொன்றுக்கு ரூ. 138.50 அல்லது திங்களொன்றுக்கு ரூ. 3,600 |
| வாடகை சீருந்து ஓட்டுநர்கள் (மீட்டர் பொருத்தப்பட்டது) | நாளொன்றுக்கு ரூ. 170 அல்லது திங்களொன்றுக்கு ரூ. 4,410 |

***விளக்கங்கள்:***

(1) அகவிலைப்படி: மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியத்துடன், பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறான அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) இந்த அகவிலைப்படி 2000ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி சராசரி குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982–ம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியாக திங்களொன்றுக்கு ரூ. 7.55 (ஏழு ரூபாய் ஐம்பத்தைந்து காசு மட்டும்) கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி குறியீட்டின் அடிப்படையில் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி திருத்தம் செயலுக்கு வரும்.

(iii) இந்த முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சராசரி விலைப்புள்ளி குறியீட்டு எண்ணினை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) (i) அன்றாட குறைந்தளவு ஊதிய வீதங்களில் வாராந்திர விடுமுறை நாட்களுக்கான ஊதியங்களும் அடங்கும்.

(ii) நாள் ஊதியத்தை கணக்கிட மாத ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(iii) இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியங்களைக் காட்டிலும், தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (2ப) எண் 55, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள்: 16 அக்டோபர் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (*b*) பகுதியிலும், மேற்படி சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள்கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளபடுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக, எவரிடமிருந்தேனும் வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை, தமிழ்நாடு அரசு பரசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006—ல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 22 செப்டம்பர் 2004 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்-II, பிரிவு—2—ல், 467—469ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.வே.வா./842/2004ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், சாலை அமைப்பதில் அல்லது சாலை பராமரிப்பில் அல்லது கட்டிடப் பணிகளில், வேலையில் அமர்த்தப்பட்டுள்ளவர்களும் கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்ட வகைகளைச் சேர்ந்தவர்களுமாகிய தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

***சாலை அமைத்தலில் அல்லது பராமரிப்பில் அல்லது கட்டிடப் பணிகளில் வேலைவாய்ப்பு***

| *தொடர் எண் (1)* | *தொழிலாளர்களின் வகைகள் (2)* | *நாளொன்றுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்கள் (3)* | | |
|---|---|---|---|---|
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* |
| | | *ரூ. காசு* | *ரூ. காசு* | *ரூ. காசு* |
| 1. | கல் வெட்டுபவர் அல்லது கல் உடைப்பவர் அல்லது கல் நொறுக்குபவர் | | | |
| | வகை-I | 169.50 | 165.00 | 155.50 |
| | வகை-II | 161.50 | 158.50 | 153.00 |

| தொடர் எண் (1) | தொழிலாளர்களின் வகைகள் (2) | நாளொன்றுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்கள் (3) | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் A<br>ரூ. காசு | மண்டலம் B<br>ரூ. காசு | மண்டலம் C<br>ரூ. காசு. |
| 2. | கல்தச்சன் அல்லது கொற்றன் | | | |
| | வகை-I | 171.00 | 169.50 | 158.50 |
| | வகை-II | 165.00 | 161.50 | 155.50 |
| 3. | தச்சர் (மரவேலை செய்பவர்) | | | |
| | வகை-I | 171.00 | 169.50 | 158.50 |
| | வகை-II | 165.00 | 161.50 | 155.50 |
| 4. | வர்ணம் தீட்டுபவர் அல்லது மெருகு கொடுப்பவர் | | | |
| | வகை-I | 161.50 | 158.50 | 153.00 |
| | வகை-II | 155.50 | 153.00 | 146.00 |
| 5. | கம்பி வளைவுகள் உட்பட பொருத்துநர் | | | |
| | வகை-I | 161.50 | 158.50 | 153.00 |
| | வகை-II | 155.50 | 153.00 | 146.00 |
| 6. | சாலை குழாய்ப் பணிக்கான குழாய்ப் பணியாளர்கள் | | | |
| | வகை-I | 161.50 | 158.50 | 153.00 |
| | வகை-II | 155.50 | 153.00 | 146.00 |
| 7. | மின் பணியாளர் | | | |
| | வகை-I | 169.50 | 165.00 | 155.50 |
| | வகை-II | 161.50 | 158.50 | 153.00 |
| 8. | இயந்திரக் கம்மியர் | | | |
| | வகை-I | 169.50 | 165.00 | 155.50 |
| | வகை-II | 161.50 | 158.50 | 153.00 |
| 9. | கிணறு தோண்டுபவர் | | | |
| | (i) ஆழ்கிணறு தோண்டுபவர் | 177.00 | 171.00 | 165.00 |
| | (ii) சாதாரண கிணறு தோண்டுபவர் | 161.50 | 158.50 | 155.50 |
| 10. | பற்றவைப்பவர் | 171.00 | 169.50 | 158.50 |
| 11. | தலைமை மஸ்தூர் | 150.50 | 148.50 | 145.00 |
| 12. | மஸ்தூர் | | | |
| | இனம்-I | 145.00 | 142.50 | 139.00 |
| | இனம்-II | 140.50 | 138.00 | 134.50 |
| 13. | தூவுபவர் அல்லது கலவைத் தொழிலாளர் (சாலை மேற்பரப்பில்) | 148.50 | 145.00 | 142.50 |
| 14. | மரத்தை அல்லது கல்லை பொதிபவர் | 148.50 | 145.00 | 142.50 |
| 15. | வண்டல் மண்ணை அகற்றுவதற்காக கிணற்றில் முக்குளிப்பவர் | | | |
| | வகை-I | 161.50 | 158.50 | 155.50 |
| | வகை-II | 155.50 | 153.00 | 149.50 |

| *தொடர் எண்* *(1)* | *தொழிலாளர்களின் வகைகள்* *(2)* | *நாளொன்றுக்கு குறைந்தளவு ஊதிய வீதங்கள்* *(3)* | | |
|---|---|---|---|---|
| | | *மண்டலம் A* *ரூ. காசு* | *மண்டலம் B* *ரூ. காசு* | *மண்டலம் C* *ரூ. காசு.* |
| 16. | சம்மட்டி அடிப்பவர் | 150.50 | 148.50 | 145.00 |
| 17. | தச்சர் | 146.00 | 144.00 | 140.50 |
| 18. | மேலாள் | 177.00 | 171.00 | 165.00 |
| 19. | கருமான் | | | |
| | வகை-I | 171.00 | 169.50 | 158.50 |
| | வகை-II | 165.00 | 161.50 | 155.50 |
| 20. | மரம் அறுப்பவர் | 165.00 | 161.50 | 155.50 |
| 21 | சந்துகளை அடைத்து நீர் உட்புகாமல் செய்பவர் | 150.50 | 148.50 | 145.00 |
| 22. | கலவைத் தொழிலாளர் (சிமிட்டி கற்கலை இயந்திரம் இயக்குபவர் உட்பட) | | | |
| 23. | பம்பை இயக்குபவர் | 158.50 | 155.50 | 149.50 |
| 24. | கலவை இயந்திர ஓட்டுநர் | | | |
| 25. | லாரி ஓட்டுநர் | 165.00 | 158.50 | 155.50 |
| 26. | லாரியை தூய்மை செய்யும் தொழிலாளி | 150.50 | 148.50 | 145.00 |
| 27. | சாலைச் சமன்பொறி வண்டி ஓட்டுநர் | 165.00 | 158.50 | 155.50 |
| 28. | குமாஸ்தா (எழுத்தர் அல்லது நேரங்குறிப்பவர்) | 155.50 | 153.00 | 149.50 |
| 29. | கனரக இயந்திர போக்குவரத்துக்கான பாலப்பணி முதலியவை போன்ற கனரக பொறியியல் கட்டுமானப் பணியில் அமர்த்தப்பட்டுள்ள கலாசிகள் அல்லது தலைமை வேலையாள் | | | |
| | வகை-I | 177.00 | 171.00 | 165.00 |
| | வகை-II | 171.00 | 169.50 | 158.50 |
| 30. | பைகோத்மேன் | 144.00 | 140.50 | 138.00 |
| 31. | காவலாள் | 144.00 | 140.50 | 138.00 |
| 32. | மொசைக் தரையை மெருகூட்டுபவர் | 171.00 | 169.50 | 158.50 |

***விளக்கங்கள்:*** (1) மண்டலங்களின் அமைப்பு பற்றிய விவரம் வருமாறு:—

**மண்டலம்-A**

காப்பு வனப் பகுதிகள் மற்றும் 5 கிலோ மீட்டர் இடைநிலப் பகுதிகள் உட்பட கீழே விவரித்துள்ளவாறு அனைத்து மாநகராட்சிகள் மற்றும் மலைப் பிரதேசங்கள்.

**மலைப்பிரதேசங்கள்:**

1. நீலகிரி மேட்டு நிலம்
2. கோயம்புத்தூர் மாவட்டத்தின் வால்பாறை துணை வட்டம்
3. சேர்வராயன் மலை
4. கோடைக்கானல்
5. பீர்மேடு

6. திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வனச்சரகத்தின் களக்காடு காப்பு வனத்திலுள்ள சங்கல்தேரி

7. விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வனச்சரகத்தின் ஸ்ரீவில்லிபுத்தூர் காப்பு வனத்திலுள்ள முதலியார் ஊத்து

8. நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் வட்டம்

9. வேலூர் மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை மற்றும் ஏலகிரி மலை

**மண்டலம்-B:** அனைத்து வகையான நகராட்சிகள் மற்றும் நகரியங்கள்

**மண்டலம்-C:** மாநிலத்திலுள்ள ஏனைய அனைத்துப் பகுதிகள் (மேலேயுள்ள மண்டலம் "A" மற்றும் "B"—ல் வராதவை)

(2) உடற்திறன், திறமை செயல்திறன் மற்றும் பணித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில், பணியாளர்களின் வகைப்பாடு, வகை-I, வகை-II என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(3) செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறும் தொழிலாளர்களைப் பொறுத்த நேர்வில், 8 மணி நேர வேலைக்கான அவர்களுடைய மொத்த நாள் ஊதியங்கள், அந்த இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கான திருத்தியமைக்கப்பட்ட நாட்கூலி வீதங்களைக் காட்டிலும் குறைவாக இருக்கக்கூடாது. மேற்சொன்ன ஊதிய வீதங்களைக் கணக்கீடு செய்வதில், ஒரு நாள் வேலையில் 8 மணி நேர வேலை அடங்கியிருப்பதாகக் கருதப்படுகிறது. தொழிலாளர் 8 மணி நேரத்திற்குக் குறைவாக வேலையில் அமர்த்தப்பட்டால், ஊதியங்கள், வீதாச்சார அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

**4. அகவிலைப்படி**

தொழிலாளர்களுக்கு, மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு, கூடுதலாக 28 காசுகள் (இருபத்தெட்டு காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரெண்டு) மாதங்களுக்கு அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல், தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

2. பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

3. நாட்கூலியைக் கணக்கிட, மாத ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

4. மாத ஊதியத்தை கணக்கிட, நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

5. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள் இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***தி. வைரவசுந்தரம்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (2ப) எண் 58, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு (J-1)த் துறை, நாள் : 17 அக்டோபர் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (பி) பகுதி மற்றும் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 30 ஜூன் 2004ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்—II பிரிவு 2, 296–297 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா./489/2004ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்து அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனை குழுவைக் கலந்தாலோசித்த பின்னர் தமிழ்நாட்டில் வெட்டுமரத் தொழிலில் பணிக்கு அமர்த்தப்பட்டு, கீழேயுள்ள விவர அட்டவணையின் (2)ஆம் நெடும் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவணையின் (3)ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு அறிவிக்கை, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

### விவர அட்டவணை

***வெட்டுமரத் தொழில் வேலைவாய்ப்பு***

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகை* | *நாளொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்கள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | *ரூ.காசு* |
| **I.** | **தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| | (1) மரம் வெட்டுவர்/இயக்குபவர் | |
| | (2) மரம் அறுப்பவர் | |
| | (3) இரம்பம் கூர் தீட்டுபவர் (Saw Sharpener) | |
| | (4) அனைத்து வகை இரம்ப இயந்திரத்தை இயக்குபவர் (All Saw-driver Operator) | |
| | (5) மேற்பூச்சிடு இயந்திரத்தை இயக்குபவர் (Veneering Machine Operator) | 144.00 |
| | (6) மின் பணியாளர் | |
| | (7) முதலாள் | |
| | (8) பட்டறை இயக்குபவர் | |
| | (9) கொதிகலன் இயக்குபவர் | |
| | (10) இயந்திரக் கம்மியர் | |
| | (11) தச்சர் | |
| **II.** | **ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| | (1) மெருகூட்டுதல் (Polishing) | |
| | (2) சிப்பம் கட்டுவர் (மர வரிசட்டத்தால் சிப்பம் கட்டப்படுதல்) | |
| | (3) பெட்டி தயாரித்தல் (சிப்பம் கட்டுதல்) | 138.00 |
| | (4) அனைத்து வகையான இரம்ப இயந்திரத்தை இயக்குபவர் உதவியாள் | |
| | (5) வெட்டப்பட்ட மரத்துண்டுகளை கொண்டுவர உதவுபவர் (Log Helper) | |
| **III.** | **தேர்ச்சி பெறாதவர்கள்:** | |
| | (1) மரத்துண்டுகளை கொண்டு வருபவர்கள் | |
| | (2) பொதுவான உதவியாள் | |
| | (3) சிப்பம் கட்டுவதில் உதவுபவர் | |
| | (4) தேர்ச்சி பெறாத உதவியாள் | 132.50 |
| | (5) காவலர் | |
| | (6) வண்டிக்காரர் | |
| | (7) வெட்டப்பட்ட மரத்துண்டு தொகுதி உதவியாள் | |

***விளக்கங்கள்:***

***அகவிலைப்படி:***

(1) தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாள் ஒன்றுக்கு 27 காசு (இருபத்து ஏழு காசு மட்டும்) உயர்த்தி அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது, முந்தைய 12 மாதங்களுக்கான அதாவது (ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு, ஏப்ரல் முதல் தேதியன்று ஒவ்வோர் ஆண்டும் கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டுக்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்விதப் பாகுபாடும் காட்டப்படக்கூடாது.

(3) மாத ஊதியத்தைக் கணக்கிட வேண்டுமாயின், ஒரு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம், அதே ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 133, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, நாள்: 31 அக்டோபர் 2008.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியிலும், 9ஆம் பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், விசைத்தறி தொழிலில் பணியமர்த்துவதற்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள் நிர்ணயிப்பதை பொறுத்த வரையில் விசாரணைகளை நடத்துவதற்கும், அரசுக்கு ஆலோசனை நல்குவதற்கும் பின்வரும் உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை இதனால் நியமிக்கிறார்:—

**தனி நபர்கள்:**

| | | |
|---|---|---|
| (1) | தொழிலாளர் நலத் துறை, துணை ஆணையாளர், மதுரை | *தலைவர்* |
| (2) | தொழிலாளர் துறை ஆய்வாளர், மதுரை | *செயலாளர்* |
| (3) | உதவி இயக்குநர், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்ககம், சென்னை—600 006. | *உறுப்பினர்* |

**வேலை அளிப்பவரின் பிரதிநிதிகள்:**

(1) திரு. வி.என். சுவாமிநாதன், *உறுப்பினர்*
த/பெ. திரு. வி.எம்.என். நடேசமுதலியார்,
22, காமாட்சி அம்மன் கோவில் தெரு,
சென்னிமலை—638 051

(2) திரு. கே.எஸ். ஆறுமுகம், *உறுப்பினர்*
த/பெ. திரு. சுப்பிரமணியம்,
57, அங்காளம்மன் கோயில் தெரு,
எடப்பாடி—637 101

(3) திரு.கே. அழகிரிநாதன், *உறுப்பினர்*
த/பெ. திரு. எஸ். குப்புசாமி,
5/185, கே.என். காலனி,
அம்மாபேட்டை, சேலம்—14.

**தொழிலாளர்களின் பிரதிநிதிகள்:**

(1) திரு. ஏ.ஜி. ஆறுச்சாமி, *உறுப்பினர்*
இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC)
த/பெ. கணபதி கவுண்டர்,
5/166-A, மணியாரி தோட்டம்,
அரசூர் அஞ்சல், சூலூர் (வழி),
பல்லடம் வட்டம்,
கோயம்புத்தூர்—641 407.

(2) திரு. ப்பி. கந்தசாமி, எச்.எம்.எஸ், *உறுப்பினர்*
த/பெ. திரு. என். பெரியசாமி,
1/10, அப்பியபாளையம்,
பெருமநல்லூர், திருப்பூர்—641 666.

(3) திரு. கே. ராமகிருஷ்ணன், *உறுப்பினர்*
பொதுச் செயலாளர்,
திருப்பூர் பனியன் நகர் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்,
வி.பிசி. சிந்தன் நகர், 4—வது தெரு,
வளையங்காடு விரிவாக்கம்,
காந்தி நகர் அஞ்சல், திருப்பூர்—641 603

**ட்டி. பிரபாகரராவ்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**தி. வைரவசுந்தரம்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.